**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 59 of 2022**

Prosecution witness LW2 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 09.04.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.திம்மராயன் (எ) சின்ன திம்மராயன் | Father Name | : | திரு.முனியப்பா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

என்னை போலீசார் ஒரே ஒருமுறை தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். ஆஸ்பித்திரியில் வைத்து விசாரித்தார்கள் . கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் . அவ்வாறு விசாரித்தபோது என்னுடன் பாரதியும் இருந்தார் என்று சொன்னால் அப்பொழுது பாரதி என்னுடன் இல்லை. பாரதி அப்பொழுது எங்கு இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது . போலீசார் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான் . (தற்போது சாட்சி விசாரித்தார்கள் என்றும், கையெழுத்து வாங்கவில்லை என்று கூறுகிறார்).

நான் சொல்லுவதை போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்று சொன்னால் என்னை விசாரித்தார்கள் அவ்வளவு தான் . என்னை விசாரித்தபோது காலை 10.00-10.30 மணி இருக்கும் , அது அடுத்தநாள் காலையாகும். தற்போது ஆஜரில் இருக்கும் எதிரிகளை சம்பவத்திற்கு முன்பு

நான் பார்த்து கிடையாது என்று சொன்னால் பர்கூர் போலீஸ் ஸ்டேசனில் வைத்து பார்த்தேன். பர்கூர் போலீஸ் ஸ்டேசனில் பார்ப்பதற்கு முன்னர் அதற்கு முன்னர் பார்த்ததில்லை என்றால் சரிதான் . பர்கூர் போலீஸ் ஸ்டேசனுக்கு சம்பவம் நடந்த அன்று தான் நான் போய் இருந்தேன் என்றால் சரிதான் . இறந்துப்போனவரின் அப்பா அம்மா ஆஸ்பிட்டலுக்கு வந்திருந்தார்களா என்று சொன்னால் அப்பா வந்திருந்தார் , அம்மா ஏற்கனவே இறந்துவிட்டார் . ரகுபதிக்கு நான் தாய் மாமன் உறவு முறையாகும் . ரகுபதிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். பாரதிக்கு கல்யாணமாகி குழந்தை இருக்கும் விவரம் எனக்கு சம்பவத்திற்கு முன்னர் தெரியும் என்று சொன்னால் அந்த விவரம் தெரியாது. பர்கூர் போலீஸ் ஸ்டேசன் போனபிறகு தான் பாரதிக்கு திருமணமாகி குழந்தை இருக்கும் விவரம் தெரியும் என்றால் சரிதான் . என்னை ரகுபதி தான் காவல் நிலையத்திற்கு அழைத்துப்போனார்.

என்னை போலீசார் விசாரணையின்போது ரகுபதிக்கும் , பாரதிக்கு எவ்வளவு காலமாக உறவு இருந்து வந்தது என்றும் , அவர்கள் எங்கே குடியிருந்து குடும்ப நடத்தி வந்தார்கள் என்ற விவரத்தை நான் சொல்லி இருக்கிறேனா என்று சொன்னால் அந்த விவரத்தை போலீசாரிடம் நான் சொல்லவில்லை. ரகுபதி இன்னொருவர் மனைவி உடன் இருக்கும் பட்சத்தில் தாய்மாமன் என்ற முறையில் வேண்டாம் அந்த உறவு என்று நான் சொல்லியிருப்பேனா என்று சொன்னால் முன்னரே தெரிந்திருந்தால் நான் அந்த உறவை தடுத்து இருப்பேன் . இந்த வழக்கில் எங்கள் சார்பாக ஒரு வழக்கறிஞர் வேண்டும் என்று நான் மனு செய்துள்ளேன் என்று சொன்னால் நான் மனு ஏதும் போடவில்லை. போலீஸ் விசாரணையில் 16.09.2021 ம் தேதி

பாரதி குழந்தையுடன் வந்து ரகுபதி வேலை செய்யும் ஓசூர் பேராண்டபப்பள்ளிக்கு வந்து அவருடன் தங்கி இருந்தார் என்று நான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அவ்வாறு ஏதும் சொல்லவில்லை . என்னை எதற்காக ரகுபதி போலீஸ் ஸ்டேசன் கூப்பிட்டார் என்ற விவரம் எனக்கு போலீஸ் ஸ்டேசனுக்கு போகும்வரையில் தெரியாது என்று சொன்னால் போனில் என்னிடம் இவ்வாறு கூப்பிட்டுள்ளார்கள் அதனால் போலீஸ் ஸ்டேசன் போக வேண்டும் என்று சொன்னார்.

பாரதி , ரகுபதி பிரச்சனை சம்பந்தமாக என்னை போலீஸ் ஸ்டேசன் போகவேண்டும் என்று போனில் ரகுபதி கூப்பிட்டார். பாரதி என்ற பெண்ணை அன்று தான் முதல் முதலாக நான் பார்த்தேன் என்றால் சரிதான் . சம்பவத்தன்று காலையில் தான் போன் செய்து ஸ்டேசனுக்கு போகவேண்டும் என்று சொன்னார்கள். நான் தான் மற்ற நபர்களை அழைத்து வந்தேன் என்று சொன்னால் அது தவறு. வண்டியை என் மகன் தான் எடுத்து வந்தார். என் மகன் பெயர் நந்தகுமார் . என் பையன் வண்டியில் தான் நாங்கள் அனைவரும் கிளம்பி வந்தோம் என்றால் சரிதான் . எங்களுடன் ரகுபதியும் எங்கள் வண்டியில் வந்தார். எங்களுடன் வந்த நபர்கள் நான் தான் அழைத்து வந்தேன்.எதற்காக அத்தனை நபர்களை அழைத்துச் சென்றேன் என்று சொன்னால் பேசுவதற்காக அத்தனை பேர்களை அழைத்து போனேன் . President ராஜப்பாவும் எங்களுடன் வண்டியில் வந்தார்.

ராஜப்பா எங்களுக்கு சொந்தகாரர் இல்லை. நாங்கள் அனைவரும் பஸ்தலப்பள்ளில் இருந்து கிளிம்பு வந்தோம் . நான் கீழ்பூங்குருத்தி ஊருக்கு போய் உள்ளேனா என்று சொன்னால் போய் இருக்கிறேன் என்று

சொன்னால் சரிதான். அது என் அக்கா கணவர் ஊராகும் . ஸ்டேசனில் யார் என்ன புகார் கொடுத்துள்ளார் என்ற விவரத்தை நான் தெரிந்துக்கொண்டேனா என்று சொன்னால் அதற்கு முந்தைய நாள் அவர்கள் புகார் கொடுத்திருந்தார்கள் அன்றைய தினம் நான் போகவில்லை . 01.10.2021 ம் தேதி பர்கூர் காவல் நிலையத்தில் யார் என்ன புகார் கொடுத்திருந்தார்கள் என்ற விவரத்தை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் . 01.10.2021–04.10.2021 வரை பாரதி மற்றும் ரகுபதி எங்கு தங்கியிருந்தார்கள் என்ற விவரம் எனக் கு தெரியாது என்றால் சரிதான். அன்றைய தினம் தான் பாரதி , ரகுபதி ஆகியோர் ஒட்டேகனூர் கேட் அருகே வந்திருந்தார்கள். அந்த ஒட்டேகனூர் கேட் அருகே தான் முதல் முதலாக பாரதியை நான் பார்த்தேன் என்றால் சரிதான் . 04.10.2021 தேதி போலீஸ் ஸ்டேசன் உள்ளே வைத்து பஞ்சாய்த்தில்லை என்றால் சரிதான் , ஆனால் ஸ்டேசனுக்கு எதிரில் வைத்து ஊர்காரர்கள் பேசினார்கள் . 04.10.2021 தேதி போலீஸ் ஸ்டேசன் எதிரில் வைத்து ஊர்காரர்கள் பஞ்சாய்த்து பேசினார்கள் என்ற விவரத்தை போலீசாரிடம் நான் சொன்னேனா என்று சொன்னால் சொல்லியிருக்கிறேன்.

எனக்கு தமிழ் படிக்க தெரியும் என்று சொன்னால் தெரியாது . நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அவ்வாறு போலீஸ் ஸ்டேசன் எதிரில் வைத்து ஊர்காரர்கள் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல . சம்பவம் நடந்தபிறகு ரகுபதியை எங்கள் வண்டியிலே எடுத்துச்சென்று விட்டோமா என்று சொன்னால் எனக்கு அடிப்பட்டுவிட்டது அதனால் நான் ஆஸ்பிட்டலுக்கு போய்விட்டேன் , நான்

ஆம்புலென்ஸ் மூலம் ஆஸ்பிட்டலுக்கு போனேன் . ஆம்புலென்சுக்கு என் மகன் தான் தகவல் சொன்னார் . அந்த ஆம்புலென்சில் தான் ரகுபதியையும் அழைத்து போனார்களா என்று சொன்னால் இல்லை . ரகுபதி யார் எந்த வண்டியில் ஆஸ்பிட்டலுக்கு கொண்டு போனார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆஸ்பிட்டலில் நான் உள்நோயாளியாக தான் இருந்தேன் . நான் அடிப்பட்டதற்கு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் . அந்த புகாரின்மீது போலீசார் அன்று இரவே விசாரித்தார்கள் என்றால் சரிதான் . என்னுடன் ஆஸ்பிட்டலுக்கு என் பையன் நந்தகுமார் வந்தார் . சம்பவ இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான் . எனக்கு அடிப்பட்டு அரைமணிநேரம் , மூக்கால் மணி நேரத்தில் ஆம்புலென்சில் வந்துவிட்டது.

ஆம்புலென்ஸ் வந்தபோது போலீசும் வந்துவிட்டது என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது . எங்கள் வண்டி அந்த சமயத்தில் ஓட்டும் நிலையில் தான் இருந்தது என்று சொன்னால் சரிதான் , ஆனால் கண்ணாடி எல்லாம் உடைந்திருந்தது . வண்டியை போலீசார் தான் கொண்டுபோய் போலீஸ் ஸ்டேசனில் விட்டார்கள் என்றால் சரிதான் . நான் ஆம்புலென்சில் ஏறுவதற்கு முன்னாகவே வண்டியை போலீஸ் ஸ்டேசனுக்கு எடுத்து போய் விட்டார்கள் என்றால் அது தவறு . எனக்கு முன்பாகவே ரகுபதியை ஆஸ்பிட்டலுக்கு கொண்டுபோய்விட்டார்கள் என்று சொன்னால் இல்லை நான் தான் முதல் முதலாக ஆஸ்பிட்டலுக்கு போனேன் . என்னை ஆஸ்பிட்டலுக்கு அழைத்து சென்றபோது மூன்று தெரிந்தநபர்களை அடித்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் இல்லை நான்கு நபர்கள் அடித்ததாக சொன்னேன். நான் ஆஸ்பிட்டலில் 1 1/2 நாட்கள் இருந்தேன்.

நான் மதியம் 2.50 மணிக்கு எல்லாம் ஆஸ்பிட்டலில் அட்மிட் ஆகிவிட்டேன் என்று சொன்னால் 2.50-2.55 மணிக்கு போய் அட்மிட் ஆனேன் . எனக்கு அடிப்பட்டது சம்பந்தமாக ஆஸ்பிட்டலில் உள்ளவர்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நாங்கள் திருப்ப வந்தபோது ராஜப்பா எங்கள் வண்டியில் வரவில்லை.

சம்பவ இடத்திற்கும் , கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு இடையே 5 கி.மீ இருக்கும் என்று சொன்னால் அதற்கும் குறைவாக தான் இருக்கும். சம்பவ இடத்திற்கும் , போலீஸ் ஸ்டேசனுக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்று சொன்னால் சுமார் 3 கி.மீ தொலைவு இருக்கும். போலீஸ் விசாரணையில் கதிரேசனும், சதீசும் கையில் ஆளுக்கு ஒரு இரும்பு ராடு வைத்திருந்ததாக சொல்லியிருக்கிறேனா என்று சொன்னால் சொல்லியிருக்கிறேன். சம்பவ இடத்தில் பிரச்சனையான போது பொதுமக்கள் கூடிவிட்டார்கள் என்றால் அது தவறு . ஓட்டலில் இருந்தும் யாரும் வரவில்லை. போலீஸ் ஸ்டேசனுக்கு எதிரில் வைத்து பஞ்சாய்த்து பேசியபோது கதிரேசன் தரப்பில் இருந்து 20 நபர்கள் வந்திருந்தார்கள் என்று சொன்னால் 20-25 நபர்கள் இருந்தார்கள் அவர்கள் யார் தரப்பு ஆட்கள் என்று தெரியாது . பஞ்சாயத்தில் நான் கலந்துக்கொண்டு பேசினேன் என்று சொன்னால் அது தவறு, ஆனால் பக்கத்தில் நின்றுக்கொண்டு இருந்தேன் . பஞ்சாயத்தில் என்ன முடிவு எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது . பாரதி , ரகுபதி சம்பந்தமாக தான் அந்த பஞ்சாயதிற்கு கூப்பிட்டார்கள். டைவர்ஸ் சம்பந்தமாக பேசினார்கள், வாரிசு சம்பந்தமாகவும் பேசினார்கள் . பாரதி உடைய அம்மா அப்பா பெயர் தெரியாது. பாரதிக்கு என்ன குழந்தை உள்ளது என்ற விவரம்

தெரியாது, பாரதி பஞ்சாய்த்திற்கு குழந்தையுடன் வந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது, பாரதி உடைய கணவர் என்ன வேலை செய்கிறார் என்ற விவரம் தெரியாது , பாரதிக்கு இவர்தான் கணவர் என்று சம்பவத்திற்கு பின்னிட்டு தெரிந்தது என்று சொன்னால் சரிதான்.

சம்பவத்தின்போது பார்த்த நபர்கள் அதன்பிறகு கோர்டில் தான் பார்க்கிறேன் என்று சொன்னால் சரிதான் . அன்றைய தினமே பாரதி கணவர் மற்றும் அவர் குடும்பத்தினாரை கைது செய்துவிட்டார்கள் என்ற விவரம் அன்றைய தினமே எனக்கு தெரியாது . இது சம்பந்தமாக பேப்பரில் நியூஸ் வந்தது என்றால் சரிதான் . பேப்பரில் வந்த போட்டோவை நான் ஏதும் பார்க்கவில்லை நான் அந்த சமயத்தில் ஆஸ்பிட்டலில் இருந்தேன் . இந்த சம்பவத்தினை பற்றி விவரங்கள் எதிரிகள் உடைய போட்டோவுடன் செய்திதாளில் வந்த விவரத்தை நான் பின்பு தெரிந்துக்கொண்டேன் . நான் செய்திதாளில் வந்த புகைப்படத்தின் அடிப்படையில் தான் நான்கு வருடங்கள் கழித்து சரியாக நீதிமன்றத்தில் அடையாளம் காட்ட முடிந்தது என்று சொன்னால் நான் ஆஸ்பிட்டலில் இருந்ததால் செய்திதாளில் வந்த விவரத்தை நான் பார்க்கவில்லை . எதிரிகள் சம்பந்தமாக அடையாள அணிவகுப்பு போலீசார் நடத்தினார்களா என்று சொன்னால் அவ்வாறு ஏதும் நடத்தவில்லை. சம்பவத்திற்கு பின்னிட்டு தான் பாரதியின் கணவர் பெயர் கதிரேசன் என்று தெரியவந்தது என்று சொன்னால் சரிதான்.

போலீஸ் விசாரணையில் எதன்அடிப்படையில் மற்ற எதிரிகளின் பெயர்களை நான் குறிப்பிட்டு சொன்னேன் என்று சொன்னால் திருப்ப வண்டியில் வந்தபோது பாரதிதான் அவர்கள் பெயர்களை சொன்னார், ஆளை

பின்னிட்டு அடையாளம் காட்டினார். சம்பவம் நடந்தபோது கையை பிடித்ததாக சொல்லும் நபர் யார் , உடன் இருந்ததாக சொல்லும் நபர் யார் என்று பெயர் சொல்லி எனக்கு தெரியாது என்று சொன்னால் அது சரியல்ல. பஞ்சாயத்தில் பாரதியின் கணவர் சார்பாக பேசிய நபர்கள் பெயர் என்னவென்றால் யார் யாரோ எல்லாம் இருந்தார்கள் அவர்கள் பெயர் தெரியாது. கதிரேசனின் அப்பா அம்மா பெயர் ஏதும் பாரதி என்னிடம் சொல்லவில்லை.

கதிரேசனுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்ற விவரத்தை பாரதி என்னிடம் சொல்லவில்லை . பாரதி இந்த நான்கு பேர் பெயர்களை மட்டும் குறிப்பிட்டு சொல்ல வேண்டிய காரணம் அவர்கள் பெயர்களை சம்பவத்திற்கு பின்னிட்டு சொன்ன காரணத்தினால் தான் என்று சொன்னால் சரியல்ல, பர்கூர் ஸ்டேசனிலே அவர்கள் பெயர் தெரியும் . பர்கூர் ஸ்டேசனில் இருந்து பையணப்பள்ளி சாய் சரவண பவன் எவ்வளவு தூரம் என்று சொன்னால் சுமார் 20–22 கி.மீ இருக்கும். இன்னொருடைய மனைவி ரகுபதி அழைத்து வந்ததற்கு ஏன் சம்பந்தம் தெரிவித்தேன் என்று சொன்னால் அந்த பொண்ணு அவருடன் வாழவில்லை என்று சொன்ன காரணத்தினாலும், ஸ்டேசனில் எழுதிக்கொடுத்துவிட்ட காரணத்தினாலும் , கணவர் டைவர்ஸ் நீங்கள் வாங்கிக்கொடுங்கள் என்று சொன்ன காரணத்தினாலும், ரகுபதி டைவர்ஸ் இருவருக்கும் வாங்கி தருகிறேன் என்று சொன்னால் காரணத்தினாலும் நாங்கள் பாரதியை அழைத்து வந்துவிட்டோம்.

01.10.2021 பாரதி குடும்பத்தினாரும், ரகுபதி குடும்பத்தினாரும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று சொன்னால் அந்த விவரம் தெரியாது. சம்பவத்தன்று பாரதி தரப்பில் இருந்து தான் குழந்தை சம்பந்தமாக

பஞ்சாய்த்திற்கு அழைத்தார்கள் என்று சொன்னால் அந்த விவரம் தெரியாது . சம்பவத்தின் அன்றும் குழந்தை யார் வைத்துக்கொள்வது என்பது சம்பந்தமாக தான் பஞ்சாய்த்து என்று சொன்னால் அந்த விவரம் தெரியாது . ஏற்கனவே விவாகரத்து சமரசமாக பெற்றுக்கொள்ளாம் என்று முடிவு எடுக்கப்பட்டது என்று சொன்னால் முந்தைய நாளே பேசி முடிவு எடுத்து , எழுதிவிட்டார்கள். இருதரப்பினார்களும் பேசி அதில் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று சொன்னால் அந்த விவரம் தெரியாது . அன்றைய தினம் ஜீவனாம்சம் அதிகமாக கேட்க வலுக்கட்டாயமாக குழந்தையை நாங்கள் தூக்கி சென்றோம் என்று சொன்னால் அது தவறு.

எங்கள் நடவடிக்கை பிடிக்காத காரணத்தினால் தான் தலைவர் ராஜப்பா எங்களுடன் திரும்ப வரவில்லை என்று சொன்னால் ஏதோ வேலை இருப்பதாக அவர் போய்விட்டார். போலீஸ் விசாரணையில் ராஜப்பா திரும்ப வரும்போது எங்களுடன் வரவில்லை என்ற விவரத்தை போலீசார் கேட்போது சொல்லவில்லை என்று சொன்னால் போலீசார் அந்த விவரத்தை கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை . போலீசார் விசாரணையில் பாரதியின் முகத்தில் அவர் கணவர் கிறிவிட்டார் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் 04.10.2021 தேதி ஆஸ்பிட்டலுக்கு போனபிறகு நான் சுயநினையுடன் தான் இருந்தேன் என்று சொன்னால் மறுநாள் தான் சுயநினைவு வந்தது. சக்திவேல் என் அக்காவின் மருமகன் ஆவார். அவர் ரகுபதியின் மாமா ஆவார் . சக்திவேல் இட்டாச்சி வண்டி ஓட்டிவருகிறார். சம்பவ நடந்த இடத்தின் பக்கத்தில் ஓட்டல் உள்ளது என்றும், அந்த ஓட்டலில் வாசல் வரை காரை போடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். அந்த காரையில் தான் நாங்கள் வண்டியை நிறுத்தினோம் என்று சொன்னால் அதற்கு பக்கத்தில் நிறுத்தினோம்.

அந்த சமயத்தில் ஒரு கார் ஒன்று இருந்தது . ஓட்டலில் ஆட்கள் இருந்தார்கள் என்று சொன்னால் நான் பார்க்கவில்லை . இந்த சம்பவம் சுமார் 5 நிமிடம் நடந்திருக்குமா என்று சொன்னால் 5–10 நிமிடங்கள் நடந்திருக்கும். அந்த சம்பவத்தின்போது எங்கள் தரப்பில் இருந்தவர்களும் அங்கு இருந்தவர்களை தாக்க போனோம் என்றால் அது தவறு . 04.10.2021 அன்று நான் சொன்ன விதத்தில் , சொன்ன முறையில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல . நான் போலீஸ் விசாரணையில் பாரதி சொன்னதன் அடிப்படையில் தான் எதிரிகள் பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான் . சம்பவத்தின் அன்று என்ன நடந்த என்ற விவரத்தை எங்கள் குடும்பத்தார் வேண்டுமென்றே மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . அன்றைய தினம் நடந்த சம்பவத்திற்கு மூல காரணமே எங்கள் குடும்பத்தினர் என்று சொன்னால் அது சரியல்ல . அதனால் தான் சம்பவயிடத்தில் ரகுபதியை விட்டுவிட்டு நான் மட்டும் நந்தகுமாருடன் ஆஸ்பிட்டலுக்கு போய் விட்டேன் என்றால் அது சரியல்ல.

அதனால் தான் இன்றைய தேதி வரையில் உண்மையை பேசிவிடக்கூடாது என்று பாரதி எங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம் என்றால் அது சரியல்ல . நான் சொன்னதன்பேரில் பாரதி Assisting prosecution மனு தாக்கல் செய்து இருக்கிறார் என்றும் அவருக்கு அந்த மனுவிவரம் தெரியாது என்று சொன்னால் அது சரியல்ல. ஏற்கனவே செய்திதாள் மூலம்,

பாரதி சொன்னதன்பேரிலும் எதிரிகளின் அடையாளத்தை தெரிந்துக்கொண்ட பிறகு எதிரிகளை நீதிமன்றத்தில் முதல் முதலாக அடையாளம் காட்டுவது சட்டப்படி செல்லுபடி ஆகாது என்று சொன்னால் அது சரியல்ல . ஏற்கனவே என் மூலமாக போலீசார் ஒரு புகார் மனுவை அன்று இரவே வாங்கியுள்ளார் என்றும் அந்த மனுவை நான் மறைத்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. அடுத்த நாள் போலீசார் என்னை கேள்வி கேட்டார்கள்.

அந்த சம்பவத்தின்போது எனக்கு காயம் ஏற்பட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் அது தவறு . வழக்கின் தன்மையை மாற்றுவதற்காக பொய்யாக எனக்கு காயம் ஏற்பட்டதாக நான் சொல்கிறேன் என்று சொன்னால் அது தவறு . நான் சொல்வதுபோல் எந்த எதிரியும் என்னை தாக்கவில்லை என்றும் , எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் அது தவறு. இந்த வழக்கில் நான் மற்றும் சக்திவேல் நந்தகுமார் ஆகியோர் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்று சொன்னால் அது தவறு. எங்களால் தான் ஒரு குழந்தை அப்பா , அம்மாவை பிரித்து வாழ்ந்து வருகிறது என்று சொன்னால் அது தவறு.

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.04.10 03:57:31 +0530